# 22-07-2024 செய்தி

## காவடி யாத்திரை செல்லும் வழிகளில்

- காவடி யாத்திரைக்காக உத்தரபிரதேச அரசு பிறப்பித்த உத்தரவை அடுத்து, மத்தியப் பிரதேசத்தின் புனித நகரமான உஜ்ஜைனிலும், வியாபாரியின் பெயர் பலகை வைப்பது குறித்து உத்தரவிடப்பட்டுள்ளது.
- வட மாநிலங்களில் இன்று துவங்க உள்ள ஸ்ரவண மாதத்தில் சிவத்தலங்களுக்கு காவடி யாத்திரை நடைபெறுகிறது.
- புனித யாத்திரையாகக் கருதப்படும் இதன் பாதைகளில் அனைத்து வியாபாரிகளும் தங்கள் பெயர்களை பெரிதாக எழுதிவைக்க உ.பி அரசு உத்தரவிட்டிருந்தது.
- மபியின் உஜ்ஜைன் நகரில் பழம்பெருமை வாய்ந்த கால பைரவன் கோயில் அமைந்துள்ளது. இங்கு காவடி யாத்திரை நடைபெறும்.
- வியாபாரிகள் தங்கள் பெயர்களுடன் கைப்பேசி எண்களை குறிப்பிட எவரும் மறுக்க முடியாது. ஏனெனில், வியாபாரிகளின் விவரங்களை அறியும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளது.
- இதன்மூலம், முஸ்லிம் வியாபாரிகளை அறிந்து அவர்களுக்கு பாதுகாப்பை அளிக்க முடியும்.
- இந்த உத்தரவை செப்டம்பர் 2022-ல் பிறப்பிக்க நகராட்சி முயன்று அதற்கு மாநில அரசின் அனுமதி கிடைக்கவில்லை.
- தற்போது நாட்டின் பல பகுதிகளில் அமலாக்கப்பட்டுள்ள உத்தரவை அவந்திகாவின் பெரிய தீர்த்த நகரமான உஜ்ஜைனிலும் அமல்படுத்தப்படுவது அவசியமாகிறது.

## இந்தியாவில் முதியவர்களை எண்ணிக்கை 2050–க்குள் இரட்டிப்பாகும்

- இந்தியாவில் முதியவர்கள் எண்ணிக்கை 2050-ஆம் ஆண்டுக்குள் இரட்டிப்பாகும் என ஐ.நா. மக்கள்தொகை (யுஎன்எஃப்பிஏ) அமைப்பின் இந்தியாவுக்கான தலைவர் ஆண்ட்ரியா வோஜ்னர் தெரிவித்தார்.
- இந்தியா நிலையான வளர்ச்சியை விரிவுப்படுத்துவதில் முன்னுரிமை அளித்து வருகிறது.
- இதில் இளைஞர்கள் மற்றும் முதியவர்களின் மக்கள் தொகை, நகரமயமாக்கல், இடம்பெயர்வு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை அடங்கும்.
- அவை அனைத்தும் தனித்துவமான சவால்கள் மற்றும் வாய்ப்புகளை வழங்குகின்றன.
- நாட்டில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களின் மக்கள்தொகை 2050-ஆம் ஆண்டுக்குள் 34.6 கோடி பேருடன் இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் ஓய்வூதியத் திட்டங்களில் அதிக முதலீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.
- குறிப்பாக வறுமையில் தனியாக வாழும் பெண்களிடம் அதிக கவனம் தேவை.
- நாட்டில் 10 முதல் 19 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் 25.2 கோடி பேர் உள்ளனர்.
- அவர்களுக்கு கல்வி தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் நாட்டை நிலையான வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்ல முடியும்.
- 2050-இல் 50% நகரமயம் வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் இந்தியா 50 சதவீத அளவுக்கு நகரமயமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்நிலையில், காற்று மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நிர்வகிக்க ஸ்மார்ட் சிட்டிகள் உருவாக்குவதுடன் வலிமையான உள்கட்டமைப்பு மற்றும் மலிவு விலையில் வீடுகள் அமைப்பதும் முக்கியமானதாகும்.
- மக்களின் இடம் பெயர்வுகளை நிர்வகிப்பதற்கு திறன் மேம்பாடு மற்றும் பொருளாதார வாய்ப்புகள் தேவை.
- நகரமயமாக்கும் திட்டங்கள் என்பது பெண்களின் பாதுகாப்பையும் பாலின சமத்துவத்தையும் கருத்தில் கொண்டு வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இருக்க வேண்டும்.
- கருத்தரிப்பு காலத்தில் தாய் மற்றும் குழந்தையின் நலனுக்காக ஆரோக்கியமான கால இடைவெளி என்பது நிகழாண்டின் மக்கள்தொகை தினத்தின் கருப்பொருளாகும்.

## உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்படுமா அசாமின் 700 ஆண்டு பழமையான சமாதி?

- அசாம் மாநிலத்தில் அஹோம் வம்சத்தை சேர்ந்த அரசர்கள் மொய்தாம்ஸ் என்ற சமாதியில் அடக்கம் செய்யப்பட்டனர். சிறு குன்று போல் வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த மொய்தாம்ஸ் 700 ஆண்டுகள் பழமையானது.
- உலக பாரம்பரிய குழுவின் 46 -வது கூட்டம் டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று முதல் 31 -ம் தேதி வரை நடைபெறுகிறது.
- அசாம் மாநிலத்தின் 700 ஆண்டுகள் பழமையான மொய்தாம்ஸ் இடம்பெற்றுள்ளது. பரிசீலனைக்குப்பின் மொய்தாம்ஸ் தேர்வு செய்யப்பட்டால், உலக பாரம்பரிய பட்டியலில் வடகிழக்கு மாநிலத்தில் இருந்து இடம்பெறும் முதல் கலாச்சார பாரம்பரிய நினைவுச் சின்னமாக மொய்தாம்ஸ் இருக்கும்.
- உலக பாரம்பரிய பட்டியலில் 168 நாடுகளைச் சேர்ந்த 1,199 இடங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் இந்தியாவைச் சேர்ந்த 44 இடங்கள் உள்ளன.

## பரஸ்பர நிதிகளுக்கு மாறும் பொதுமக்கள் சேமிப்பு

- வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீடு தொடர்பான உச்சி மாநாடு மும்பையில் நடைபெற்றது.
- பொதுமக்கள் காலம் காலமாக தங்கள் சேமிப்பை வங்கிகளின் டெபாசிட் திட்டங்களில் முதலீடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
- இப்போது அவர்களுடைய மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் வங்கிகள் மட்டுமல்லாது பங்குச்சந்தைகள், பரஸ்பர நிதி, காப்பீடு, ஓய்வூதிய நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களிலும் முதலீடு செய்ய தொடங்கிவிட்டனர்.
- இது வங்கித் துறையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக, கடன் மற்றும் டெபாசிட் இடையிலான இடைவெளியை சீராக வைத்திருக்க வங்கிகள் புதிய முறைகளை ஆராய வேண்டும்.
- இதை சமாளிக்க குறுகிய கால கடன், டெபாசிட் சான்றிதழ் உள்ளிட்ட இதர ஆதாரங்களை அதிக அளவில் நம்பியிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனால் வட்டி விகிதத்தை அதிகரிக்க வேண்டி இருப்பதுடன், ரொக்க நிர்வாக சவாலையும் சந்திக்க வேண்டி உள்ளது. வங்கிகள் இந்த மாற்றங்களுக்கு தயாராக இருக்க வேண்டும்.

SURESH